(ஐ) சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழக பயணச் சீட்டுப் பரிசோதகர் தாக்கப்பட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, சொல்லுங்கள்.

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10-5-2010 திங்கட்கிழமை அன்று, சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் டிக்கெட் பரிசோதகராக பணியாற்றக்கூடிய திரு. கே.வி. ஜோதி மற்றும் 3 டிக்கெட் பரிசோதகர்கள் Route No. 521 என்ற பேருந்தை, தரமணி பேருந்து நிறுத்தத்தில் பரிசோதனை செய்கையில், பயணிகளிடம் டிக்கெட் கேட்டபோது, சில நபர்கள் டிக்கெட்டைக் காட்ட முடியாது என வாக்குவாதத்தில் ஈடுபட்டு, பயணிகள் இதிலே குறுக்கிட்டு, அவர்களை சமாதானப்படுத்தி அனுப்பியிருக்கிறார்கள். இந்த டிக்கெட் பரிசோதகர்கள், டிக்கெட் வாங்காமல் பயணம் செய்யக்கூடியவர்களைப் பரிசோதிப்பதற்காக நியமிக்கப் பட்டவர்கள். ஆனால், அவர்களுடைய பணியைச் செய்யவிடாமல் தடுத்ததோடு மட்டுமல்ல, அவர்கள் புகார் செய்து தலைமைச் செயலகத்திற்கு வரவழைத்து, அந்த டிக்கெட் பரிசோதகர் நண்பர் ஜோதி அவர்களை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சின்னசாமி, நீங்கள் மானியக் கோரிக்கையின்மீது பேசவில்லை. விஷயத்தை மட்டும் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டு உட்காருங்கள்.

திரு. ஆர். சின்னசாமி: அந்த நபர்கள் ஜோதி அவர்களைக் கடுமையாகத் தாக்கி, அவர் கீழே விழுந்திருக்கிறார். அவருக்கு உதவி செய்வதற்காகப் பத்திரிகையாளர்கள் அவரைக் கொண்டு சென்றுள்ளனர். தலைமைச் செயலகத்திலேயே அடித்திருக்கிறார்கள் என்று சொன்னால், பாதுகாப்பில்லாத ஒரு நிலை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சம்பவத்தைப் பற்றிக் காவல் துறையிடம் புகார் செய்யப்பட்டிருக்கிறது. உரிய முறையில் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)